பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**24 03 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** அசாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

**2.** மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் குறித்து வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மர்கோ ரூபியோவுடன் தொலைபேசி வாயிலாக உரையாடினார்.

**3.** உலக காசநோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

**4.** அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியதுபோல் அந்நாட்டுடன் எந்தவித பேச்சுகளும் நடைபெறவில்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது.

**5.** இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் குறித்து வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மர்கோ ரூபியோவுடன் தொலைபேசி வாயிலாக உரையாடினார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், மேற்காசியாவில் நிலவி வரும் மோதல் குறித்தும், அதனால் சர்வதேச பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்தும் தாம் அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எரிசக்தி பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பாகவும் விவாதித்ததாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று அவரை பஹ்ரைன், ஓமன், குவைத், கத்தார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளின் தூதர்கள் சந்தித்துப் பேசினார்கள்.

அப்போது மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து அவர்களுடன் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அவர்களுடைய நாடுகளில் வசிக்கும் இந்திய சமூகத்தினருக்கு அளிக்கப்படும் ஆதரவுக்காக திரு. ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

<<<<>>>>

அசாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

மனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் **9**ஆம் தேதி நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை மே மாதம் **4**ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

கோவாவில் **Ponda**, கர்நாடகாவில் **Bagalkot**, **Davanagare** தெற்கு, நாகாலாந்தில் **Koridang**, திரிபுராவில் **Dharmanagar** சட்டப்பேவைத் தொகுதிகளுக்கு நடைபெற உள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் நேற்று நிறைவடைந்தது.

அத்தொகுதிகளில் வேட்புமனு மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

மனுக்களை திரும்பப் பெற நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் **9**ஆம் தேதி நடைபெறுகிறது.

இதற்கிடையே கேரளம் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட மொத்தம் 676 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக மன்னார்காடு சட்டப்பேரவை தொகுதிக்கு 12 வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்துள்ளனர்.

<<<<>>>>

உலக காசநோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காசநோயால் ஏற்படும் உலகளாவிய சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 24ஆம் தேதியன்று உலக காசநோய் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி உத்தரப்பிரதேசத்தில் நடைபெறும் தேசிய அளவிலான நிகழ்வில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா இன்று பங்கேற்கிறார்.

இதில் காசநோய் இல்லாத இந்தியா இயக்கத்தின் சார்பில் 100 நாள் பிரச்சாரத்தை அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.

"காசநோய் இல்லாத இந்தியா" என்ற இயக்கத்தின் மூலம் காசநோயை ஒழிப்பதில் இந்தியாவின் விரைவான முன்னேற்றத்தை வெளிப்படுத்துவதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட சாதனைகள், புதுமைக் கண்டுபிடிப்பு உத்திகள், சமூக ஈடுபாடு ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கான நிகழ்வாக இது அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், காசநோயால் உலகில் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

எனினும் மத்திய அரசின் காசநோய் இல்லா இந்தியா இயக்கத்தின் மூலம் நாட்டில் காசநோய் பாதிப்பு குறித்து விரிவாக கண்டறிந்து இலவச சிகிச்சை அளிக்கப்படுவதாகவும், இதனால் நோயாளிகள் குணமடைந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

காசநோயை முற்றிலுமாக ஒழிக்க அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து உறுதியுடன் செயல்பட வேண்டும் என்று குடியரசுத்தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் கணவரை இழந்தோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான நிதியத்தை ஏற்படுத்துவதற்காக பெட்ரோலியப் பொருட்கள் மீது 5 ரூபாய் வரை கூடுதல் வரி விதிக்க

வகை செய்யும் மதிப்புக்கூட்டு வரி திருத்த மசோதா சட்டப்பேரவையில் நிறைவேறியது.

மாநில அரசின் இந்த முடிவு மக்கள் விரோத நடவடிக்கை என்று எதிர்க்கட்சியான பிஜேபி கருத்து தெரிவித்துள்ளது.

இது பணவீக்கத்தில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அது கூறியுள்ளது.

முன்னதாக இம்மசோதாவை புறக்கணித்து ஹிமாச்சலப்பிரதேச சட்டப்பேரவையில் இருந்து பிஜேபி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

தற்போது இந்த மசோதா ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட உள்ளது.

<<<<>>>>

நாட்டு மக்களின் கூட்டு முயற்சியால் இந்தியா அனைத்து நெருக்கடியையும் எதிர்கொண்டு முன்னேறிச் செல்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஊடக நிறுவன மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டின் பொருளாதாரம் விரைவாக வளர்ச்சியடைந்து வருவதாக தெரிவித்தார்.

மேற்காசியாவில் நிலவும் பிரச்சினைகளுக்கு இடையே இந்தியா வளர்ச்சியை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாக பிரதமர் கூறினார்.

இந்தியா சவால்களை தவிர்க்காமல் அவற்றை எதிர்கொள்கிறது என்றும் தெரிவித்தார்.

எரிசக்தி, உரங்கள், அத்தியாவசியப் பொருட்கள் என எதுவாக இருப்பினும் மக்களுக்கு சிறிய அளவில் கூட, சிரமங்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

போர் போன்ற சூழல்களிலும் கூட இந்தியாவின் கொள்கை மற்றும் திறனைக் கண்டு உலக நாடுகள் வியப்பதாக கூறினார்.

உலகில் அனைத்து நாடுகளுக்கும் இந்தியா நம்பகமான கூட்டாளியாக திகழ்கிறது என்று திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பது தொடர்பாக ஈரானுக்கு அளிக்கப்பட்டுள்ள கெடு, மேலும் 5 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

எரிசக்தி ஆலைகள் மீது அடுத்த 5 நாட்களுக்கு அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தாது என்று அவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா, ஈரான் அதிகாரிகளுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற பேச்சுகள் சிறப்பாகவும், ஆக்கப்பூர்வமாகவும் இருந்ததாக தெரிவித்தார்.

இப்பேச்சுகள் பிரச்சினைக்கு தீர்வு காண வழிவகுக்கும் என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியதுபோல் அந்நாட்டுடன் எந்தவித பேச்சுகளும் நடைபெறவில்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக அளவில் எரிசக்தி சந்தைகள் மீதான அழுத்தத்தை தவிர்க்கவும், எதிர்கால ராணுவ திட்டமிடலுக்காவும் திரு. ட்ரம்ப் இவ்வாறு கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஓமனில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் நேற்று வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டதில் 5 பேர் உயிரிழந்தனர்.

பர்கா கடலோர நகரத்தில் 10 பேர் சென்றுகொண்டிருந்த வாகனம் வெள்ளத்தில் இழுத்துச் சென்ற நிலையில் 7 பேர் மீட்கப்பட்டதாகவும், 3 பேர் உயிரிழந்ததாகவும் ஓமன் அரசு தெரிவித்துள்ளது.

மற்றொரு சம்பவத்தில் **Wadi Al-Maawil** மாகாணத்தில் வெள்ளப்பெருக்கில் வாகனம் இழுத்துச் செல்லப்பட்டு 2 பேர் உயிரிழந்ததாகவும் ஓமன் அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேசம், சிக்கிம் மற்றும் மேற்குவங்கத்தின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிராவின் மத்தியப் பகுதி, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, கர்நாடகாவின் வடக்கு மற்றும் தெற்கு உட்பகுதிகளில் நாளை மறுநாள் வரை இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர் 7-5, 3-6, 6-4 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் Hendri Squire-ஐ வென்றார்.

---------------

தேசிய உள்ளரங்கு தடகள சாம்பியன் போட்டி புவனேஸ்வரில் இன்று தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் சீனியர் மற்றும் 20 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 278 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

ஆடவர் நீளம் தாண்டுதலில் தமிழக வீரர் பிரவீன் சித்ரவேல் பங்கேற்கிறார்.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி 7-0 என்ற கோல் கணக்கில் முகமதன் அணியை வென்றது.

--------------

துனீஷியா சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

**29ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியாவின் முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.**

**<<<<The End>>>>**